செ.வெ.எண் :730 நாள்: 08.11.2021

**தஞ்சாவூர் மாவட்டத்தில் இல்லம் தேடி கல்வி திட்டத்தின் மூலம் 1,59,155 மாணவர்கள் பயன்பெற உள்ளனர்-மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

தஞ்சாவூர் மாவட்டம், தூய அந்தோனியார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் சார்பில் இல்லம் தேடி கல்வி திட்டம் குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.11.2021) நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையேற்று துவக்கி வைத்து பேசியதாவது:-

கொரோனா பெருந்தொற்றுப் பரவல் சார்ந்த பொது முடக்கக் காலங்களில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியை குறைக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ”இல்லம் தேடிக் கல்வி” என்னும் திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அரசின் 100மூநிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ளது. கொரோனா பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் மூடியிருந்ததால் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வித் திறனில் எந்தவொரு குறைபாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி நமது மாவட்டத்தில் மாவட்டக்குழு கூட்டம் நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் முன்பு கலைக்குழு மூலம் தொடக்க விழா நடைபெற்றது கலைக்குழுவினர் 3 குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் 15 ஒன்றியங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். ஒவ்வொரு நாளும் 2 பள்ளிகளிலும் 2 பொது இடங்களிலும் கலைநிகழ்ச்சிகள் நடத்துகின்றனர்.

மேலும், 20 மாணவர்களுக்கு ஒரு தன்னார்வலர் என்ற வீதத்தில் இதுவரை 10686 தன்னார்வலர்களின் தகவல்கள் illamthedikalvi.tnschools.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான ”இல்லம் தேடிக் கல்வி”க்கான பயிற்சி 26.10.2021 அன்று கமலாசுப்பிரமணியம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இப்பயிற்சியில் தன்னார்வலர்களை தேர்வு செய்தல், மையங்களை தேர்வு செய்தல் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் இல்லம் தேடி கல்வி திட்டத்தினை எவ்வாறு வெற்றிகரமாக நடத்துவது சார்பாக பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் மாவட்டக்கல்விகுழு உறுப்பினர்கள், னுஐநுவு- விரிவுரையாளர்கள், வட்டாரவளர்ச்சி அலுவலர்கள், வட்டாரக்கல்வி அலுவலர்கள், வட்டாரவளமைய மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்பயிற்றுநர்கள், ஊளுழு குழு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள், கல்வி மாவட்ட அளவிலான தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள், வட்டார அளவிலான தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட கருத்தாளர்கள் கலந்துகொண்டனர். அதனை

தொடர்ந்து 29.10.2021 மற்றும் 30.10.2021 ஆகிய இரண்டு நாட்கள் மாநில அளவிலான பயிற்சி மாநிலத் திட்ட இயக்ககத்தில் உதவித் திட்ட அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், CSOs, ஆசிரியர் பயிற்றுநர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் (20 நபர்கள்) வழங்கப்பட்டது. முதல் கட்டமாக 02.11.2021 (செவ்வாய் கிழமை) அன்று தஞ்சாவூர், தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட அளவிலான பயிற்சியில், மாவட்டக் குழு உறுப்பினர்கள் - 13, இல்லம் தேடி கல்விக்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட 4 ஆசிரியர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் - 19, ஆசிரியர் பயிற்றுநர்கள் - 42 மற்றும் மாவட்ட கருத்தாளர்கள் 20 என மொத்தம் 98 நபர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இரண்டாம் கட்டமாக 08.11.2021 (திங்கள் கிழமை) இன்று தஞ்சாவூர், தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட அளவிலான பயிற்சி மீதமுள்ள ஆசிரியர் பயிற்றுநர்கள் 51 நபர்கள், இல்லம் தேடி கல்விக்காக ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஆசிரியர்கள் வீதம் 15 ஒன்றியங்களுக்கு 30 ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட கருத்தாளர்கள் 20 என மொத்தம் 101 நபர்கள் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து ஒன்றிய அளவிலான பயிற்சி 09.11.2021 முதல் 12.11.2021 வரை அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற உள்ளது. கலைக்குழுவினர் மீண்டும் 15 ஒன்றியங்களிலும் கலை நிகழ்ச்சிகள் மூலம் இல்லம் தேடி கல்விக்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மேற்கொள்ள உள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் 1,59,155 மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற உள்ளனர். தன்னார்வலர்கள் இதுவரை பதிவு செய்யாத குடியிருப்புகளில் விரைந்து பதிவு செய்ய வேண்டும் என்றும், கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தன்னார்வலர்களாக முன்வர வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு.சிவக்குமார், உதவி திட்ட அலுவலர் திரு.ரமேஷ், தூய அந்தோனியார் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. ஆண்டனி அலாய் அல்போன்ஸ், ஒருங்கிணைப்பாளர் திரு.வேம்பையன், திரு.தங்கவேலு, திரு.சதீஷ், குந்தவை நாச்சியார் கல்லூரி பேராசிரியர் திரு.சுகுமாறன், ஆடுதுறை ஆசிரியர் பயிற்சி நிறுவன பேராசிரியர் திரு.போஸ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்**